# மின்வலு சக்தி அமைச்சு

# பதவி வெற்றிடங்கள் அறிவித்தல்

# இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை

*"நிலையான எரிசக்தியில் உங்கள் வாழ்க்கையை இன்றே தொடங்குங்கள்...:"*

*புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாடு மற்றும் செயல்திறன் மேம்பாடுகளில் ஈடுபட்டுள்ள உச்ச தேசிய நிறுவனத்தில் சேருங்கள். காலநிலை மாற்ற பேரழிவிலிருந்து கிரகத்தைக் காப்பாற்றுவதற்கான நமது போராட்டத்தில் ஆற்றல் மாற்றத்தை இயக்கும் நிபுணர்களின் உயரடுக்கு குழுவில் உறுப்பினராகுங்கள்.*

## இலங்கை நிலைத்த எரிசக்தி அதிகாரசபையில் சேருங்கள்

*பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான தகுதியுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நியமனங்கள் அத்தகைய பதவிகளுக்கு அரசாங்கம் அங்கீகரித்துள்ள சம்பள அளவுத்திட்டங்களில் நிரந்தர ஆளணிக்கு மேற்கொள்ளப்படும்.*

***<u>உதவிப் பணிப்பாளர் (பொறியியல்) - 14 பதவிகள்</u>***

***தகைமைகளும் அனுபவமும்***

*இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அல்லது இலங்கைப் பொறியியலாளர்கள் சங்க உறுப்பினர் நிறுவகத்தால் அங்கீகரித்துள்ள மின்சார/ எந்திர/ செயல்முறை/உற்பத்தி அல்லது வலு விடயம் சம்பந்தமான துறைகளில் பொறியியல் இளமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

**சம்பள அளவுத்திட்டம்:** MM 1-1 -2025 : **ரூ.** 91,690-2,480x10-3,450x15-168,240

***<u>தொழில்நுட்ப உதவியாளர்</u>***

***(மின்சார/எந்திரவியல்/சிவில்/செயல்முறை) - 07 பதவிகள்***

(இவற்றில், ஹம்பாந்தோட்டா, செவனகல மற்றும் எம்பிலிபிட்டிய பகுதிகளில் செயல்படும் சூரிய ஆற்றல் நிலையங்களுக்கு ஐந்து பணியிடங்கள்)

ஒதுக்கப்பட்டுள்ளன ***(தகவல் தொழில்நுட்பம்) - 02 பதவிகள்***

***தகைமைகளும் அனுபவமும்***

*மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழு அங்கீகரித்துள்ள ஒரு தொழில்நுட்ப/வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் வழங்கும் தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமை மட்டம் 5 இற்குக் குறையாத ஒரு டிப்ளோமாவை/சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

**சம்பள அளவுத்திட்டம்: MA2-2-2025: ரூ. 50,540-540x10-630x7-1080x4-1280x20-90,270**

## *எல்லாத பதவிகளுக்குமான வயதெல்லை:*

*விண்ணப்பங்கள் அழைக்கப்படும் இறுதித் திகதிற்கு 18 வயதுக்குக் குறையாமலும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் /நியதிச்சட்ட சபைகளில்/அரச துறை நிறுவனங்களில் உள்ள ஊழியர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).*

## *விண்ணப்பிக்கும் முறை:*

*சகல பொருத்தமான சான்றிதழ்களினதும் சான்றுபடுத்திய பிரதிகளுடன் உறவு சாராத இரண்டு நபர்களின் பெயர்களையும், முகவரிகளையும், தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்கள் 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் இலக்கம் 80, ஏர்னெஸ்ட் த சில்வா மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தை வந்தடையக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.*

*விண்ணப்பிக்கும் பதவி கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எழுதப்படுதல் வேண்டும்.*

*அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் /நியதிச்சட்ட சபைகளில்/அரச துறை நிறுவனங்களில் உள்ள ஊழியர்களின் விண்ணப்பங்கள், அத்தகைய விண்ணப்பங்கள் கருதப்படுதல் வேண்டும் என்றால் அந்தந்த நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். Energy Authority*

**பணிப்பாளர் நாயகம்**
*இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை*

*இலக்கம் 80, ஏர்னெஸ்ட் த சில்வா மாவத்தை*

*கொழும்பு 07.*

2025.07.11

**ஒரு நிலைத்த மற்றும் எரிசக்தி பாதுகாப்புடைய இலங்கை**